

# NTNU ற்கு நல்வரவு

NTNU

Norwegian University of Science and Technology







# NTNU ற்கு நல்வரவு

மத்திய நோர்வேயின் தலைநகரமாக Trondheim விளங்குகிறது. சுமார் 165.000 மக்கள் இங்கு வசிக்கின்றனர். நகரமானது பிரசித்தி பெற்ற Nidaros கிறிஸ்தவ தேவாலயம் மற்றும் Rosenborg கால்பந்தாட்டக்கழகத்தையும் கொண்டுள்ளது. அத்துடன் நகரமானது வெவ்வேறு துறைகளுடன் தொடர்புடைய ஆய்வு மற்றும் தொழிநுட்பக்கல்விக்குப் பெயர் பெற்றது. நோர்வேயின் தொழிநுட்ப விஞ்ஞான பல்கலைக்கழகம் (NTNU) நீண்ட கல்விப்பாரம்பரியத்தையும் 20.000 பதிவு செய்யப்பட்ட மாணவர்களையும் தற்போது கொண்டுள்ளது.

1910 ஆம் ஆண்டிலிருந்து நோர்வே முழுவதிலுமிருந்து இளைஞர்களும் யுவதிகளும் Trondheim வந்து உயர் கல்வியை கற்று வருகின்றனர். NTNU அந்நேரம் NTH (Norges tekniske høgskole) என அழைக்கப்பட்டது. பல்கலைக்கழகம் கல்வி மற்றும் ஆய்வு துறைகளில் சர்வதேச புகழ்பெற்றது. NTNU உலம் முழுவதும் பயன்படுத்துவதற்குகந்த அறிவை உற்பத்தி செய்வதனால் சிறந்த தரமிக்கதாக அமைந்துள்ளது. இது மாணவர்களுக்கு ஊக்கமளிப்பதாக அமைகிறது.

இயற்கை விஞ்ஞானதுறை தொடர்பாக கூர்மைப்படுத்தப்பட்ட கல்விதுறை மற்றும் ஆய்வுகள் என்பன Trondheim நகரத்தினை தொழிநுட்பத்தின் தலைநகரமாக்குகிறது. உதாரணமாக இந்நகரம் ஐரோப்பாவில் முதன் முதலில் தந்தியில்லாத சர்வதேச கணனி வலையமைப்பை நகர் பகுதி முழுவதும் ஏற்படுத்தியுள்ளது. NTNU நோர்வேயின் தொழிநுட்ப அறிவை சர்வதேச அளவில் தரமுயர்த்தவதில் திடமான பங்களிப்பை வழங்கியுள்ளது. பல்கலைக்கழகம் தொழிநுட்பவியல், கட்புலஓவியம், மானிடவியல், மருத்துவம், சமூகவிஞ்ஞானம், கட்டிடக்கலை, மற்றும் சமூகவிஞ்ஞானம் போன்ற வேறுபட்ட பல்துறைகளில் இணைந்து செயற்படுகிறது. நோர்வே மற்றும் வெளிநாடுகளிலுள்ள சிறிய மற்றும் பெரிய தொழிலகங்கள் NTNU யில் கல்வி பயின்றவர்களை வேலைக்கு அமர்த்துகின்றன. பல்கலைகழகம் ஊக்கமிக்க மாணவர்களை நாட்டின் பல பாகங்களிலிருந்து கவர்ந்திழுக்கிறது. NTNU யில் பெண்களின் எண்ணிக்கை பலவருடங்களாக அதிகரித்து வருகிறது. தற்போது அண்ணளவாக சம எண்ணிக்கையிலான ஆண்களும் பெண்களும் கல்வி பயில்கின்றனர்.

கல்விமான்களின் நகரம் என்பதும் அதிக எண்ணிக்கையிலான மாணவர்கள் தொகையும் சௌகரியமான பாதுகாப்பான கல்வி கற்றும் காலத்தை வழங்குவதற்கு அடிப்படையாக அமைகின்றன. இங்கு பல சிறியஅறை மற்றும் தொடர்மாடி வீடுகளுடைய விடுதிகளும் வாடகைக்கு கிடைக்க கூடியதாக இருக்கிறது. நகரம் சிறியதாகவும் குறைந்த சுற்றளவையும் கொண்டுள்ளமையால் பொதுபோக்குவரத்து மூலமும் சைக்கிளிலும் இலகுவாக பிரயாணம் செய்யலாம். மேலும் Trondheim நாட்டின் மத்திய பகுதியில் அமைந்துள்ளமையால் இங்கிருந்து புகையிரதம், விமானம், மற்றும் பஸ் மூலம் பிரயாணம் செய்வது இலகுவாக அமைகிறது.

மாணவர்கள் நகரத்திற்கு வந்ததும் அவர்களை கவனித்துக் கொள்ளும் நோக்கில் சுயவிருப்பத்தின் அடிப்படையில் முதுமானி பட்டபடிப்பு மாணவர்கள் புதியவர்களை கவனித்துக் கொள்ளும் ஒழுங்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ஒரே துறையில் கல்வி பயிலும் குழுக்களாக பிரிக்கப்படுவர்கள். மாணவர் குழுக்கள் முதுநிலைமாணவரால் தலைமை தாங்கப்படும். மாணவர்களை கவனித்து அவர்களுக்கு பல்கலைக்கழக வாழ்வு நிலைமை, மாணவர் அமைப்புகள், வளாகச்சூழல் மற்றும் நகரம் முழுவதுமான பாதைகள், விபரங்களை அறிமுகப்படுத்தி வைப்பார்கள். இது Trondheim மற்றும் NTNU வினை அறிந்து கொள்வதற்கும் மேலும் பரீட்சயத்தை ஏற்படுத்திக் கொள்வதற்கும் ஒரு சிறந்த வழியாகும்.

# Trondheim இல் தமிழர்கள்

சுமார் 200 தமிழர்கள் Trondheim தினை தமது தாயகமாக கொண்டுள்ளனர். தாய்மொழி ஆசிரியர்கள், விளையாட்டுக்கழகம் மற்றும் இரு இந்து கோவில்களும் வீட்டுபாடஉதவிக்கானகல்வி என்பனவும் பல கலாச்சார நிகழ்வுகளும் காணப்படுகின்றன. பெரும்பாலான ஆசிய உணவுப் பொருட்களை நகரத்தில் காணப்படும் பல குடிபுகுந்தவர்களின் கடைகளில் பெற்றுக் கொள்ளலாம். நகரத்திலுள்ள தமிழர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்துவது இலகுவானது. கலாச்சார மற்றும் கோவில் திருவிழாக்களுக்கு தமிழர் மாணவர்கள் அழைக்கப்படுகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.



# கற்கைநெறிவாய்ப்புக்களும் நுழைவுபுள்ளிகளும்

NTNU வேறுபட்ட தனித்தன்மை வாய்ந்த கற்கைநெறிவாய்ப்புக்களையும கொண்டுள்ளது. இதில் உலகிலேயே முதன்மிக்கதாக சில துறைகளில் அமைந்துள்ளன. NTNU இல் கடல்சார் தொழில் நுட்பம் பற்றிய கல்வியும் ஆய்வும் தனித்துவமானதாகும்.
உளவியல் நிபுணத்துவகல்வி மருத்துவம், கட்டிடக்கலை மற்றும் கட்புலஓவியக்கலை, ஆசிரியர்கற்கைநெறி, இசை மற்றும் சிவில் பொறியிலாளர் ஆகிய துறைகளிலும் கற்கை நெறிகளைக் கொண்டுள்ளது. மொழித்துறையில் ஆர்மிக்கவர்களாயின் செய்திப்பரிமாற்றம், ஊடகவியல், இலக்கியம், சமூகவியல், பொருளாதாரம், நாடகம் மற்றும் அரங்கவியல் ஆகிய துறைகளில் NTNU வில் நன்கு அமைக்கப்பட்டதும் தரமிக்க கல்விச்சூழலை மானிடவியல், கைவினைகலை, சமூகவிஞ்ஞானம், பொருளாதார நிர்வாகதுறை மற்றும் விஞ்ஞானப்பிரிவு என்பன கொண்டுள்ளன.

சகல கற்கைநெறிகளும் மற்றும் நிபுணத்துவதுறைகளும் நுழைவு அனுமதி மட்டுப்படுத்தப் பட்டுள்ளது. மேல்நிலை கல்லூரியில் சிறந்த புள்ளிகளைக் மாணவர் கொண்டிருந்தால் மட்டுமே நுழைவு சாத்தியமாகும். சில துறைகளில் கல்வியை மேற்கொள்வதாயின் மாணவர்கள் விஞ்ஞானப் பாடங்களான கணிதம், பௌதீகம் மற்றும்

இரசாயனம் போன்றவற்றை மேல்நிலை கல்லூரியில் கற்றிருக்க வேண்டும் என வலியுறுத்தப்படுகிறது.

கற்பித்தல் முறைகள் துறைகளுக்கு ஏற்ப மாறுபட்டதாக அமைந்துள்ளன. பல விரிவுரையாளர்கள் மற்றும் பேராசிரியர்கள் தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கபட்டவர்கள். விரி-வுரைகளுடன் குழுரீதியான வேலைகள், செயற்பாடுகள் மற்றும் ஆய்வுகூடவேலைகள் போன்றவை திறமை மிக்க துறைவல்லுனர்களால் வழிநடத்தப்படுகிறது. பாடத்திட்டம் தொடர்பாக சிரமங்களை எதிர்நோக்கும் மாணவர்கள் மேலதிக கவனிப்பு மற்றும் அறிவுறுத்தல்களை கோரலாம்.

பொருத்தமான துறையை தெரிவு செய்வது கடினமானது என சிலர் கருதுகின்றனர். NTNU வில் மாணவர்களின் கல்வி மற்றும் வேலைவாய்ப்பு தொடர்பான திட்டமிடலில் உதவுவதற்கான ஆலோசனையாளர்கள் இருக்கின்றனர். மாணவர்சேவை மற்றும் அறி-வுரை வழங்கும் பகுதி என்பன மாணவர்கள் பாதுகாப்பான பயன்மிக்க கல்வியைப் பெறுவதற்குரிய வகையில் செயற்படுகிறது. NTNU வில் குறிப்பான தேவைகளையுடையவர்கள் மற்றும் தொழிற்பாட்டு தடைகளையுடைய மாணவர்களுக்கும் அறிவுரைகளை வழங்கவல்ல ஆலோசனை சேவைகளைக் கொண்டுள்ளது.

NTNU தொடர்பான புதிய நவீன கட்டிடங்களையும் வசதிகளையும் கொண்டுள்ளது. இங்கு பல வாசிப்புசாலைகள் காணப்படுவதுடன் பல்கலைகழக வளாகமும் மகிழ்வூட்டதக்கதாக அமைந்துள்ளது. பல்கலைக்கழக நூலகத்தில் துறைகளுக்குரிய பற்பல நூல்களை இரவல் பெறுவதற்குரிய வாய்ப்புக்களுண்டு. குறிப்பிட்ட சில துறைகளுக்கு மிகச்சிறந்த ஆய்வுகூடங்கள், கணணிச்சாலைகள், வேலைசெய்யும் கூடங்கள் மற்றும் உபகரணங்களைக் கொண்டுள்ளன. கீழே கற்கைநெறிகள் விபரங்களை காணலாம்.



# .கற்கைநெறிகள்

## சிவில் பொறியிலாளர்துறை [முதுமானி 5 வருடம்]

கட்டிட மற்றும் சூழல் தொழிநுட்பம்
கணணியியல்
இலத்திரனியல்
சக்தி மற்றும் சூழலியல்
பௌதீகவியல் மற்றும் கணிதம்
இயந்திரசாதன மாதிரி வரைவியல்
தொழில்துறைசார் பொருளாதாரமும் தொழிநுட்ப தலைமைத்துவம்
பொறியில் விஞ்ஞானம் மற்றும் IKT
இரசாயன/பதனிடல் மற்றும் நுண்ணுயிரியல் தொழிநுட்பம்
தொடர்பாடல் தொழிநுட்பவியல்
கடல்சார்தொழிநுட்பம்
சக்தி வழங்கும்பொருட்தயரிப்பு தொழிநுட்பம்
அணுமூலக்கூற்றுத் தொழிநுட்பம்
பெற்றோலியம்துறை
பொருள்அபிவிருத்தியும் தயாரிப்பும்
மண்ணியில் தொழிநுட்பம்
உயிரின இயந்திர சுயச்சீர்தகவல் தொடர்பியல்

கட்டிடகலைஞர் [முதுமானி 5 வருடம்]

அழகியல்துறை கலை மற்றும் இசையியல் [இளநிலை 3 வருடம் அல்லது முதுமானி 5 வருடம்]

கட்டிடகலை துறை
கட்புல ஓவியக்கலை ஓவியக்கலைச்கூடம்
நாடகம் மற்றும் அரங்கவியல்
திரையியல்விஞ்ஞானம் மற்றும் ஊடகத்தயரிப்பியல்
கலைவரலாறு
ஊடகவியல் விஞ்ஞானம்
இசைவிஞ்ஞானம்
இசைதொழிநுட்பம்
இசைக்கலைஞர்/இசைப்பள்ளி

வரலாறு,சமயம்,கலாச்சார-மற்றும் சிந்தனைதுறை [இளநிலை 3 வருடம் அல்லது முதுமானி 5 வருடம்]

புதைபொருள்



ஐரோப்பிய அறிவும் அந்நியமொழியும்
வரலாறு
சமய விஞ்ஞானம்
கலாச்சாரநினைவுபரிபாலனம்
கி.பி. 600/1500 வரையுள்ள வரலாற்று கால அறிவு

மெய்வல்லுனர் [இளநிலை 3 வருடம் அல்லது முதுமானி 5 வருடம்]
மெய்வல்லுனர் மற்றும் அசையியல் விஞ்ஞானம்

செய்தி தொழிநுட்பம் கணணியியல் [இளநிலை 3 வருடம் அல்லது முதுமானி 5 வருடம்]
கணணியியல்
சிவில் பொறியிலாளர்துறை கணணி தொழிநுட்பம்
சிவில் பொறியிலாளர் மற்றும் IKT
சிவில் பொறியிலாளர் கல்வியும் தொடர்பாடல் தொழிநுட்பம்

ஆசிரியர் கற்கைநெறி
ஆசிரியர்கற்கைநெறி இளநிலை பட்டபடிப்பு ஆரம்பம்.
ஐந்து வருட ஆசிரியர்கற்கைநெறி முதுமானிபட்டம்
புவியியல்
விஞ்ஞானப்பாடங்கள்
ஆலோசனை வழங்கல்



சமூகக்கல்வி
மொழி
தொழிற் துறைக்கல்வியாசிரியர்
கணிதம் மற்றும் விஞ்ஞானம் [இளநிலை 3 வருடம் அல்லது முதுமானி 5 வருடம்]
உயிரியல்
நுண்ணுயிரியலும் தொழிநுட்பமும்
பௌதீகவியல்
மண்வளதுறை
இரசாயனவியல்
கணிததுறை
சிவில் பொறியிலாளர் கல்வி பௌதீகம் மற்றும கணிதம்
சிவில் பொறியிலாளர்கல்வி இரசாயனபதனிடலும் நுண்ணுயிரில் தொழிநுட்பம்

ஊடகவியலும் தொடர்புபாடலும் [இளநிலை 3வருட அல்லது 5 வருட முதுமானி]
நாடகம் மற்றும் அரங்கவியல்
திரையியல் விஞ்ஞானம் மற்றும் தயாரிப்புக்கள்
ஊடகவியல்துறை
மருத்துவ மற்றும் சுகாதார சமூகதுறை [6வருடம்]
மருத்துவநிபுணர் கல்வி

சமூகவியல் மற்றும் உளவியல்
அரசியல் பொருளாதாரம்
உளவியல் நிபுணத்துவ கல்வி
சமூக விஞ்ஞானம்
சமூகவிஞ்ஞானம் மேலதிக கற்கைநெறி
ஆபிரிக்கா தொடர்பான துறை
அசையியல் மற்றும் மெய்வல்லுனர்
புவியியல்
கல்வியியல்
உளவியல்
சமூக மற்றும் உடல்வல்லுனர் விஞ்ஞானம்
சமூகபொருளாதாரம்
மானிடவியல்
சமூகவியல்
அரசியல் விஞ்ஞானம்

மொழியும் இலக்கியமும் [இளநிலை 3 வருடம் அல்லது முதுமானி 5 வருடம்]
ஐரோப்பிய சமூக அறிவும் அந்நியமொழியும்
மொழியும் இலக்கியமும் விரிவானது
பொது இலக்கிய விஞ்ஞானம்
ஆங்கிலம்
மொழிஒலியியல்
குப்ரான்ஸ்மொழி
– மொழியியல்
– ஸ்கண்கடிநேவிய மொழிக்குழு
– மொழிசார் தொடர்பாடல்
– யேர்மனிய மொழி

பொருளியலும் நிர்வாகமும் [இளநிலை 3வரும் அல்லது முதுமானி 5 வருடம்]
சமூசவிஞ்ஞானம் விரிவானது
– சமூகபொருளாதாரம்
சமூகபொருளாதாரம் [5வருடம்]
சிவில் பொறியிலாளர்கல்வி தொழிற்துறைசார்பொருளியலும்
தொழிநுட்பதலைமைத்துவம்

# வேலைவாய்ப்புக்கள்

NTNU இல் கல்வி பயின்ற மாணவர்கள் வேலைவாய்ப்பை பெறுவது இலகுவாகவுள்ளது. பல்கலைக்கழகம் வர்த்தக தொழிற்துறையுடன் நெருக்கமாக தொடர்ந்து, ஒத்துழைப்பை பேணுகிறது. புதிய மாற்றங்களை ஏற்படுத்துதல் மற்றும் உற்பத்திதுறை தொடர்பாக நம்பிக்கையுடன் செயற்படுகிறது. பெருமளவு மாணவர்களின் வரைதிட்டங்கள் வர்த்தக தொழிற்துறையுடன் தொடர்புடையதாக தெரிவு செய்யப்படுகின்றன. தொழில் அறிமுக நாட்கள் ஒழுங்கு-படுத்தப்படுகின்றன. இங்கு வர்த்தக தொழிற் துறையுடன் தொடர்புடைய தொழிலதிபர்கள் கலந்து கொள்வார்கள். இவர்கள் கோடைகால வேலைகளுக்கு பொருத்தமான கல்விதுறையில் உள்ள மாணவர்கள் சேர்த்துக் கொள்கின்றனர். இதன் மூலம் மாணவர்கள் சிறந்த அனுபவங்கைளப் பெறுவதுடன் எதிர்காலத்தில் வேலைவாய்ப்பு விண்ணப்பத்திற்குரிய தொடர்புகளை பெற்றுக் கொள்ள வாய்ப்பளிக்கிறது. அதி-கமான மாணவர்கள் சுயமாக கம்பனிகளை ஆரம்பித்து புதிய வேலைவாய்ப்புக்களை ஏற்படுத்துகின்றனர், அத்துடன் பல்கலைக்கழகல்வி பெற்ற மாணவர்கள் ஆசிரியர்கள் போன்ற நிபுணத்துவம் பெற்றவர்கள் தொடர்பான தேவையும் அதிகமாக காணப்படுகிறது. சமூகத்தை பிரதிநிதிப்படுத்தும் வகையில் நோர்வேயிய பாடசாலைகளில் ஆசிரியர்கள் பல் வகைப்பட்ட பின்னணிகளையுடையவர்களாக அமையவேண்டும். சிறுபான்மை பின்னணியுடைய ஆசிரியர்களுக்கான தேவை அதிகமாகவுள்ளது. NTNU இல் ஆசிரியர்கல்வியை கற்பவர்களுக்கு வேலைவாய்ப்பை பெறுவது இலகுவாகவுள்ளது. NTNU கல்வி தேர்வில் சித்தி பெற்ற மாணவர்கள் சிறப்பானவர்களாகவும் இருப்பதுடன் பல மாணவர்கள் தமது கல்வியை முடிப்பதற்கு முன்பே தொழிலதிபர்களிடமிருந்து வேலைவாய்ப்பிற்கான சந்தர்ப்பங்களை பெறுகின்றனர். உதாரணமாக பெயர் பெற்ற கம்பனிகளான StatoilHydro, Schibsted, AkerKværner, Telenor போன்ற பலவற்றில் NTNU இல் கல்விகற்ற மாண-வர்கள் வேலை வாய்ப்பைப் பெறுகின்றனர்.



# வேலைவாய்ப்புக்களில் ஈடுபட்டிருப்போர்

Edgar Ahilan Sebastian சிவில் பொறியியலாளராக இலைதுளிர் காலம் 2004 இல் தொழில்துறை பொருளாதார மற்றும் பொறியிற்துறையில் தேர்ச்சி பெற்றவர். இவர் தற்போது வர்த்தக ஆலோசகராக Steria தொழிலகத்தில் Oslo வில் பணிபுரிகிறார்.

நீங்கள் NTNU இல் கல்வி கற்பதற்கு தெரிவு செய்தமைக்கு காரணம் என்ன?
20.1 நான் இந்த துறையை தெரிவு செய்தமைக்கு காரணம் எனது ஆர்வங்கள் தொழிற்துறை பொருளாதாரம் தொடர்பாக அமைந்திருந்தன. நான் NTNU வை தெரிவு செய்தமைக்கான காரணம் இது மிகச் சிற்நத கல்வி நிலையம் என்பதாகும். அத்துடன் NTNU அங்கீகாரம் பெற்ற பல்கழைக்கழகம் என்பதை அறிந்ததும் தெரிவு கஸ்டமாக இருக்கவில்லை.

கல்வி கற்ற காலப்பகுதி எவ்வாறு அமைந்திருந்தது?
எதிர்பாராத விதமாக மிக நன்றாக அமைந்திருந்தது.
உண்மையில் நான் Oslo விலிருந்து சிறிய நகரத்திற்கு இடம்

மாற விரும்பவில்லை, ஆனால் Trondheim படிப்பதற்குரிய சூழலைக் கொண்டிருந்தது. கற்கைநெறி பயனுள்ளதாக அமைந்திருந்ததுடன் நான் எதிர்பார்த்த படி சிறந்ததாக அமைந்தருந்தது. எனக்கு பல நல்ல நண்பர்கள் வகுப்பிலும் வெளியேயும் கிடைத்தனர். இவர்களுடன் நான் தற்போதும் தொடர்புகளைக் கொண்டிருக்கிறேன். இது ஒரு மறக்க முடியாத காலம்.

கற்கைநெறியில் எப்பகுதிகள் ஆர்வமிக்கவையாக இருந்தன?

ஆரம்பத்தில் பல புதிய மனிதர்களை சந்திக்கும் வாய்ப்பு கிடைத்து. அத்தோடு பிறருடன் பழகி உறவுகளை விஸ்தரிப்பதற்கு உதவியாக அமைந்திருந்தது. மேலும் புதிய அனுபவங்களையும் பெறக் கூடியதாக இருந்தது. பாடங்கள் தொடர்பாக பார்க்கும் போது இறுதி இரு ஆண்டுகளும் மிகவும் ஆர்வமிக்கதாக அமைந்தருந்தன. பொதுவான குழுச் செயற்பாடு மற்றும் செய்முறைகள் என்பன மிகவும் நன்றாக அமைந்திருந்தன. இதன் மூலம் பிறருடன் சேர்ந்து செயற்படுவது அதாவது, செயற்திட்ட வேலை தொடர்பாகவும் மற்றும் தேர்விற்கு படிப்பதற்கான வழிமுறைகளாக இருந்தாலும் சரி பயன்மிக்க அனுபவத்தை பெற்றுக் கொள்ள கூடிய-தாக அமைந்திருந்தது. மேலும் மிகப் பொருத்தமான வர்த்தக தொழிற்துறையுடனான தொடர்பு மிக பயனுள்ளதாகும். NTNU நாடு முழுவதிலும் உள்ள தொழிலதிபர்கள் மத்தியில் நன்கு பிரபல்யமாக இருப்பதால் செயற்திட்டங்களை பூர்த்தி செய்வதற்கும் பிரதான ஆராய்சிக்கட்டுரையை ஒரு கம்பனியில் செய்து முடிப்பது இலவாக அமைகிறது. கல்வி கற்றுகும் போது தொழிற்துறையுடன் கிடைத்த தொடர்பு எனக்கு வேலை வாய்ப்பிற்கான சந்தை பற்றிய ஒர் விரிவான பார்வையை ஏற்படுத்தவதற்கும் எதிர் காலத்தில் சாத்தியமான வேலைவாய்ப்புக்கள் பற்றியும் அறியவும் உதவியது.

கல்வி கற்று முடிந்ததும் வேலையை பெறுவது இலகுவாக இருந்ததாக?

ஆம், படிப்பு முடிந்து குறுகிய காலத்தில் எனக்கு பல வேலைகளுக்கு வாய்ப்பு கிடைத்தன. வேலைவாய்ப்பு சந்தையில்

NTNU வில் கல்வி பயின்றவர்களுக்கு முதலிடம் வழங்கப்படுவதாக நான் கருதுகிறேன். ஏனெனில் NTNU நன்கறியப்பட்டதும் தேர்ச்சி பெற்ற மாணவர்களை கொண்டுள்ளதால் வேலை வழங்குபவர்களுக்கு அறிமுகமானதா-கவும் இருப்பதால் வேலைவாய்ப்பினை பெறுவதற்கு இலகுவாக அமைந்துள்ளது. NTNU இல் கல்வி கற்ற பலரை Steria பணிக்கமர்த்தியுள்ளது.

வர்த்தஆலோசகராக உங்கள் வாழ்க்கை எவ்வாறு அமைந்துள்ளது?
மிகவும் சுவாரசியமாக அமைந்துள்ளது. தினமும் புதிய விடயங்களை நான் கற்றுக் கொள்கிறேன். அத்துடன் NTNU எனது கல்வித்தகைமைகளைப் பயன்படுத்தக் கூடியதாக இருக்கிறது. நான் மிகவும் சுவாரசியமான செயற்திட்டங்களில் பங்கு கொள்வதொடு புதிய சுவாரசியமிக்க மனிதர்களையும் சந்திக்கிறேன்.

NTNU இல் படிக்க உத்தேசிப்பவர்களுக்கு நீங்கள் வழங்கு கூடிய ஆலோனைகள் எவை?
NTNU இல் உங்கள் கல்வியைத் ஆரம்பியுங்கள்! பிரபல்யமான பல்கலைக்கழகத்தில் தொடங்குவது ஒரு சிறந்த பயனுள்ள ஆரம்பமாகும். அத்துடன் சிறிய நகரத்திற்கு இடம்மாறுவதன் மூலம் சுயநம்பிக்கையை வளர்த்துக் கொள்ளலாம். வீட்டிலிருந்து இடம் பெயர்ந்து தனியே வசிப்பதன் மூலம் சுயமாக விடயங்களை செய்ய பழகிக் கொள்ளலாம். வாழ்க்கைக்கு தேவையான அனுபங்களைப் பெற்றுக் கொள்ளலாம். NTNU இல் கல்வி கற்பதன் மூலம் சிறந்த எதிர்காலத்தைப் பெறலாம்.



நீங்கள் சிறந்த பல்கலைக்கழக தேர்வுக-ளைக் பெற்றிருப்பதோடு சமூக விடயங்கள் தொடர்-பாக ஆர்வம் செலுத்துபவராக இருப்பின் HR-direktør Solfrid Skilbrigt i Steria AS உங்களை வேலைக்கமர்த்தும்.

வேலைக்கமர்த்தும் போது எவ்வாறான தகைமைகளை நீங்கள் பார்க்கிறீர்கள்?
சிறந்த கல்வி தேர்வுகள், தகவமைத்துக் கொள்ளும் தன்மை மற்றும் சமூக நிகழ்வுகள் தொடர்பான ஆர்வங்கள் என்பவையே ஞவநசயை வெற்றி பெறுவதற்கு அவசியமாகும். ஆர்வத்தை வெளிக்காட்டுவது சிறந்ததாகும். கல்விக்கு வெளியேயும் பிற விடயங்களில் ஆர்வத்தைக் கொண்டிருப்பதும் செயற்படுவதும் சிறந்ததாகும். பொருத்தமான கோடைகால தொழில்களை செய்திருப்பதும் பயனுள்ளதாகும்.

NTNU இல் கல்வி கற்றவர்கள் தொடர்பாக நீங்கள் திருப்தியடைவதற்குரிய காரணிகள் எவை?
NTNU பாடரீதியான அடிப்படையைக் கொண்டிருப்பதனால் புதிதாக மேலும் அறிவை விஸ்தரித்துக் கொள்வது இலகுவாக அமைந்துள்ளது. முடிவில் சிறந்த சூழலை உருவாக்குவதற்கும் பங்களிப்பை வழ்ங்குவார்கள்.

வேலைவாய்ப்பிற்கு நுழைபவர்களுக்கு நீங்கள் கூறும் அறிவுரைகள் எவை?
உங்கள் மீது நம்பிக்கை வையுங்கள். உங்களால் பங்களிப்பை வழுங்கமுடியும். அத்துடன் நீங்கள் எல்லா விடயங்களையும் அறிந்தவராக இருக்கமுடியாது என்பதை கருத்திற்கொண்டு புதிய விடயங்களை கற்றுக் கொள்வதில் ஆர்வமாக இருக்க வேண்டும்.

# வெளிநாட்டில் வேலை மற்றும் கல்வி வாய்ப்பு

மாணவர்கள் அனைவரும் கற்கைநெறியின் ஒரு பகுதியை வெளிநாட்டிலுள்ள கல்லூரிகளிலும் பல்கலைகழகங்களிலும் நிறைவு செய்வதற்குரிய வாய்ப்புண்டு. NTNU இங்கிலாந்து, அமெரிக்கா, சுவீடன், பிரான்ஸ், யேர்மனி போன்ற பல கல்வி நிலையங்களுடன் இணைந்து செயற்படுகிறது. வெளிநாட்டில் தங்கியிருந்து கல்வியை கற்பது வெளிநாட்டில் வேலைவாய்ப்பினைப் பெறுவதற்கு உகந்ததாக அமைந்துள்ளது.

# கல்வியிற்கான செலவீனங்கள்

சாதாரணமாக கல்வியிற்கான செலவீனத்தை Lånekassen வில் கடனாக பெற்றுக் கொள்ளலாம். Lånekassen அனைவரும் கல்வி வாய்ப்பை பெறுவதற்கு உதவியான அமைந்துள்ளது. சொந்த வருமானமில்லாமலும் பெற்றோர்களின் பொருளாதார வசதிகளில் தங்கியிராது மாணவர்கள் கல்விகற்பதற்கு கடனுதவியை பெறுவதற்கான வாய்ப்புண்டு. இத்தொகை மாதம் தோறும் கிட்டதட்ட 8000 குரோணர்களாக அமைந்துள்ளது (2007). பரீட்சையில் சித்தியடைந்தபின் (அல்லது சில சந்தர்ப்பங்களில் பட்டப்படிப்பின் படிநிலைகள் நிறைவு செய்தபின்) 40 வீதமான கடன்தொகை கல்வி ஊக்குவிப்புத் தொகையாக மாற்றப்படும் (2007). கல்வியைத் தொடரும் போது நோய்வாய்பட்டால் கடனனாது ஊக்குவிப்பு தொகையாக மாற்றப்படும். கல்வி தொடரும் வரை கடனுக்கு வட்டிகள் ஏதும் இருக்காது. கல்வி முடிவடைந்ததும் கடனுக்கான வட்டி சந்தை நிலவரத்திற்கேற்ப ஆரம்பிக்கும். இது தொடர்பான மேலதிக விபரங்களை lanekassen.no இல் காணலாம். விண்ணப்பபடிவத்தையும் இங்கு காணலாம்.

# Trondheim இல் தங்கியிருப்பதும் வசிப்பதும்

Trondheim (SiT) இல் மாணவர் சங்கத்தில் சுமார் 3000 வதிவிடங்கள் 12 வெவ்வேறு மாணவர் நகரங்களுக்கு பங்கிடப்பட்டுள்ளது. மாணவர்விடுதிகள் புதிய இளநிலை மாணவர்களையும் ஒரு சில காலம் கல்வி கற்ற மாணவர்களையும் கொண்டுள்ளன. மாணவர்கள் தனியாகவோ அல்லது பலருடன் சேர்ந்து வசிப்பதையோ தெரிவு செய்யலாம். தனியாக வசிப்பவர்களுக்கும், துணையுடன் கூடி வசிப்பவர்களுக்கும், பிள்ளைகளுடைய குடும்பத்தினருக்குமான வதிவிடங்களை விடுதிகள் கொண்டுள்ளன. மாணவர்களுக்கு பொருத்தமான உரிய வாடகை ஒப்பந்தங்களும் இங்கிருக்கின்றன. படிக்கும் காலம்வரை வதிவிடங்களை வாடகைக்குப் பெறலாம்.
மாணவர்கள் தாம் கல்வி கற்கும் காலத்தில் வசிப்பதற்குரிய வதிவிடங்களைக் கொண்டதொகுதியாக இது அமைகிறது. பெரும்பாலான விடுதிஅறைகள் தளபாட வசதிகளையுடையது. இங்கு வசிக்கும் அனைவருக்கும் சலவை அறைக்கு செல்லும் வாய்ப்பும். மற்றும் தொலைகாட்சி தொடர்புகளை பெறும் வாய்ப்புமுள்ளது. அறைகளுக்கு முன்பணமாக 3000 குரோன-ர்களும் அடுக்குதொடர்மாடி வீட்டிற்கு முன்பணமாக 5000 குரோன-ர்களும் செலுத்த வேண்டும். மாதத்திற்கு வாடகை 1645 இலிருந்து 6905 வரை வேறுபடுகிறது (விலை 2007 இலிருந்து). எல்லா வதிவிடங்களும் வேகமான வலைப்பின்னலைக் கொண்டுள்ளன. மாதத்திற்கு இதற்கான கட்டணம் 130 குரோனர்களாகும். SiT வரவேற்பறைபணியாளர், வீட்டுப்பாதுகாவலர், திருத்துனர்கள் மற்றும் சுத்தகரிப்பு தொழிலாளர்கள் ஆகியோர் மாணவர்களின் வதிவிட சூழலை சிறந்ததாக அமையவதில் கவனம் செலுத்துகின்றனர்.

Trondheim இல் தனியாரிடமும் வாடகைக்கு பெறுவதற்குமான வாய்ப்பு அதிகம் காணப்படுகிறது.
தனியாரிடம் வதிவிடங்களை வாடகைக்கு பெறுவதாயின் Adresse-avisa அல்லது விளம்பரங்களை வாசிப்பது புத்திசாலித்தனமானது அல்லது பின்வரும் இணையபக்கங்களில் வதிவிடங்களை hybel.no, ibolig.no, zett.no அல்லது finn.no தேடலாம்.






















நோர்வேயில் வசிக்கும் ஏனைய பிறருக்கு கிடைக்கும் சுகாதார சேவைகள் பெறும் உரிமையை மாணவர்கள் கொண்டுள்ளனர். Studentsamskipnaden மாணவர்களுக்குரிய சுகாதாரநிலையங்களைக் கொண்டுள்ளதுடன் ஒரு மனநல சுகாதார சேவையையும் கொண்டுள்ளது, சுகாதாரநிலையங்களில் ஒன்று பல வருடங்களாக பல மாணவர்களை தமது பட்டியலில் கொண்டிருந்தது. மேலும் அவர்கள் இளைஞர்கள், யுவதிகளுடைய வாழ்நிலை தொடர்பான மிகுந்த அநுபவமுடையவர்களாக இருக்கின்றனர். SiT சுகாதார கட்டணங்கள் தொடர்-பான பிரத்தியேக ஏற்பாடுகளை கொண்டுள்ளது. இதன் மூலம் அதிக மருத்துவ (பற்சுகாதாரம் உட்பட) செலவீனங்களையுடைய மாணவர்கள் ஒரு பகுதிக் கட்டணத்தை மீளப் பெறும் வாய்ப்பை பெறுகின்றனர்.

# ஊக்கமிக்க மாணவர்கள்

NTNU இல் 20.000 மாணவர்கள் கல்விகற்றும் போது பகுதி நேரமாக வேறு விடயங்களில் ஈடுபடுகின்றனர். மாண-வர்கள் பங்குகொள்வதற்கேற்ப பலவகைப்பட்ட விடயங்கள் காணப்படுகின்றன. மெய்யியல்,இசை,அரங்கியல், அரசியல் அல்லது வெளியரங்க செயற்பாடுகள் என்பன இதற்கு சில உதாரணங்களாகும்.

NTNUI நோர்வேயின் மிகப் பெரிய பல்வேறுபட்ட மெய்வல்லுனர்கழகங்களைக் கொண்ட அமைப்பாகும். இது 10.000 மேற்பட்ட அங்கத்தவர்களையும் 50 வெவ்வேறுபட்ட செயற்பாடுகளையும் உள்ளடக்கியதாகும். இதில் குழு விளையாட்டுக்களாக கால்பந்தாட்டம், வலைப்பந்தாட்டம், கைப்பந்தாட்டம், innebandy மற்றும் தனிநபர் விளையாட்டுக்களான squash, turn, dans, golf போன்ற பற்பல விளையாட்டுக்கள் அடங்கும். NTNU இரு பெரிய மெய்வல்லுனர் பயிற்சிக்கூடங்களைக் கொண்டுள்ளது. இதில் மாணவர்கள் பயிற்சி செய்தவதற்குரிய அங்கத்துவக்கட்டணம் மிக குறைவாகும். தவணைக்கு 420 குரோனர்கள் மாத்திரமே. சகல குழுக்களும் தமக்குரிய செயற்பாடுகளை ஒழுங்கு செய்கின்றன. அங்கத்தவர்கள் அமைப்புக்களில் எவ்வாறு செயற்பாட வேண்டும் என்பதற்கு தேவையான சிறந்த அனுபவங்களைப் பெற்றுக் கொள்வதற்கு சிறந்த வாய்ப்பாகும்.

இசைத்துறையில் ஈடுபாடுடையவர்களுக்கும் அரங்கியல் மற்றும் வானொலி, தொலைகாட்சி, பத்திரிகை விவாதவிடயங்களில் ஈடுபடுவர்களுக்கும் மாணவர்சமூகம் பொருத்தமான இடமா-கும். மாணவர்சங்கம் பல்வேறு சிறந்த செயற்பாடுகளையும் இசைநிகழச்சிகளையும் ஏற்பாடு செய்வதுடன் இவ்விடம் பெரிய விவாதாதங்களுக்கும் அரிசயல் மற்றும் தொடர்பான விடயங்களை மாணவர்கள் விவாதிப்பதற்குரிய களமா அமைகிறது.

TSAT – Trondheim தமிழ் மாணவர் சங்கம் என்பது Trondheim வசிக்கும் தமிழ் மாணவர்களின் அமைப்பாகும். இச்சங்கத்தில் சுமார் 25 பேர் அங்கம் வகிக்கின்றனர். இதில் சுமார் அரைவாசிப் பகுதியினர் மாணவிகளாகும். தமிழ் மாணவர்கள் பிறருடன் பழகுவதற்கு ஏற்ப மாணவர் அமைப்பு செயற்படுகிறது. மாணவர் அமைப்பு புதிய மாணவர்களை வரவேற்பதற்கான ஏற்பாடுகளை செய்வதுடன் ஒன்றுகூடல் மாலைகளை ஏற்பாடு செய்கிறது. தமிழர் உணவு தயாரிப்பதற்கு உதவுதல் மற்றும் திரைப்படகலை மாலைப்பொழுதுகளை ஏற்பாடு செய்தல், தைப்பொங்கல் மற்றும் பொதுவான கொண்டாட்டங்களை ஏற்பாடு செய்தல், உணவை சுட்டுச் சாப்பிடுதல் மற்றும் bowling போன்ற ஏற்பாடுகளை செய்கின்றன. முதுமானி மாணவர்கள் புதிய மாணவர்களுக்கு கற்கை நெறிகள் பற்றியும் மாணவர் வாழ்வும் பற்றியும் பயனுள்ள அறிவுரை-களை வழங்ககுவதில் வல்லவராக இருக்கிறார்கள். மாணவர் அமைப்பானது அரசியல், சமய சார்பற்ற ஒன்றுகூடல்கள், நிகழ்வுகளை மட்டுமே ஏற்பாடு செய்கிறது.



# NTNU தெரிவு செய்தமைக்கான காரணம்?



Mugunthan Dharmadas: ஏனெனில் NTNU சிவில் பொறியலாளர் கற்கைநெறி தொடர்பாக சிறந்தது. அத்துடன் நான் தொடரவிருக்கும் கற்கைநெறிக்கு தெரிவு செய்யக்கூடிய நோர்வேயில் பல இடங்களில்லாத பாடங்கள் பலவற்றை இது கொண்டிருந்தமையாகும். மேலும் Trondheim இல் நோர்வேயின் சிறந்த மாணவர்சமூகம் காணப்படுகிறது அதாவது பிறருடன் பழகுதல், தொடர்பையேற்படுத்தல் போன்றவை இலகுவானது என்பதை அறிந்திருந்தமையாகும்.



Sulaksana Sivapatham: நான் NTNU தெரிவு செய்தமைக்கான காரணம் Trondheim ஓர் சுவாரசியமிக்க நகரமாகும். அத்துடன் மாணவர்சமூகம் நாட்டின் மிகச்சிறந்ததாக அறியப்பட்டது. என்னைப் பொறுத்தவரையில் சர்வதேசமாணவர்கள் விழா ISFIT ஒரு பிரதான விடயமாகும். இதனால் நான் NTNU ஐ தெரிவு செய்தேன்.



Arani Mahendran: NTNU நான் இரசாயனவியலைக் கற்பதற்கு காரணம் இங்கு ஆய்விற்கான சிறந்த வாய்ப்புக்கள் இருப்பதை காணக்கூடியதாக இருந்தது. இங்கு விண்ணப்பிக்கும் முன் NTNU தொடர்பான அறிமுக நாட்களை ஒழுங்கு செய்திருந்தார்கள். அதில் கலந்து கொண்ட நான் மாணவவாழ்க்கை, கல்வி வாய்ப்புக்கள் பற்றியும் அறிந்து கொள்ளக் கூடியதாக இருந்தது. கட்டிடங்கள், சூழல் மனிதர்கள் எல்லாமே பிடித்தவையாக இருந்தமையால் முடிவினை இலகுவாக எடுக்க கூடியதாக இருந்தது.



Rushanth Vathanagopalan: நான் NTNU தெரிவு செய்தமைக்கு காரணம் நோர்வேயில் தொழில் நுட்பகற்கை நெறிகளுக்கு பிரசித்தி பெற்ற பல்கலைக்கழகம் என்பதாகும். அத்துடன் NTNU தொலை தொடர்பு தொலைநுட்பத்தை கற்றுக் கொள்வதற்கான வாய்ப்பினைக் கொண்டிருந்தது. இதன் மூலம் நான் விரும்பிய சிவில் பொறியியலாளர் கல்வியைப் பெறுவதற்கு உதவியது.

NTNU
பிரதானஇணையதளம்: ntnu.no
அறிவுரை சேவை:
ntnu.no/studentservice/tilrettelegging
உதவும் நல்லெண்ணஏற்பாடு: ntnu.no/fadder
மாணவர் அமைப்பு
sit.no
வதிவிடம் தேடுவதற்கு
SiT: sit.no
தனியார் சந்தை
hybel.no
ibolig.no
zett.no
finn.no
மாணவர்களின் ஓய்வு நேரம்
Trondheim தமிழர் மாணவர் சங்கம்:
org.ntnu.no/tsat/
NTNU இன் உடல்வல்லுனர் சங்கம் : ntnui.no
மாணவர்சமூகம் : samfundet.no

## தகவல்கள்: NTNU எதற்காக?

தனிசிறப்புடைய கற்கை நெறிகள்
ஆய்வு மற்றும் நீண்ட கல்விப்பாரம்பரியம்
சிறந்த தகைமையுடைய பணியாளர்கள்
சிறந்த வழிகாட்டல்கள்
ஊக்கமிக்க மாணவர்கள்
நவீன வசதிகள்
தேவையான கவர்ச்சிமிக்க தகைமைகளை உருவாக்குதல்

## NTNU ற்கு நல்வரவு

NTNU tar i mot besøk på campus, se våre nettsider www.ntnu.no

NTNU
Norwegian University of
Science and Technology

Grafisk utforming: Tapir Uttrykk. Foto av studenter Håvard Kallestad.